

வேடசந்தூர் பேருந்து நிலையம் எதிரே கோடைகால வெப்பத்தின் காரணமாக அ.தி.மு.க. சார்பில் நீர் மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் ரிப்பன் வெட்டி துவங்கி வைத்து பொதுமக்களுக்கு குளிர் பானங்களை வழங்கினார். உடன் அமைப்பு செயலாளர் வி.மருதராஜ், இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாநிலச் செயலாளர் டாக்டர்.வி.பி.பி.பரமசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிச்சாமி மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தேர்தல் நடத்தை விதிகளால் மக்கள் நலப்பணிகள் முடக்கம்:

# உள்ளாட்சி பிரதிநிதிகள் பணியாற்ற அனுமதி வழங்க வேண்டும்: பொதுமக்கள் கோரிக்கை

**திருமங்கலம். ஏப். 27-**

தேர்தல் நடைபெற்று முடிந்த பின்பும் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்வதால் மக்கள் நலப்பணிகள் முடங்கியுள்ள நிலையில் உள்ளாட்சி பிரதிநிதிகள் மக்கள் பணியாற்றிட அனுமதி வழங்கிடுமாறு தேர்தல் ஆணையத்திற்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் முடிந்த பின்னரும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் நலப் பணிகள் முடங் கி யுள் ளது. தேர் தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக ஆளுங்கட்சி சார்பில் அரசு அறிவிப்புகள், பதவியேற்பு விழா, அடிக்கல் நாட்டு விழா, பூமி பூஜை,அரசு சாரா பணி நியமனங்கள் மற்றும் பொதுத்துறையில் பணி நியமனங்கள் மேற்கொள்ளக்கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு நடத்தை விதிகள் அமலில் உள்ளது. மேலும் பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் வாக்குப்பதிவு முடிந்த பின்பு வாக்கு எண்ணிக்கை முடிவடையும் வரை தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைபிடிக்கப்படும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்திருந்தார்.

இதே போல் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் அரசு நிர்வாகத்திலும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் மக்கள் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வந்திட மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இருப்பது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி வருகிறது. இருப்பினும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அதிகாரிகள் செயலாற்றி வருகின்றனர். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த நடத்தை விதிகளால் நீண்ட காலத்திற்கு மக்கள் பணியாற்றிட இயலாமல் தவித்து வருகின்றனர்.

குறிப்பாக கோடை காலமான தற்போது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் மக்கள் பிரதிநிகளின் செயல்பாடு இன்றி குடிநீர் பிரச்சனை தலைதூக்கி வருகிறது. உள்ளாட்சி பிரதிநிதிகளின் அலுவலகங்கள் அனைத்தும் நடத்தை விதிகளால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களால் அலுவலகத்தில் அமர்ந்து மக்கள் பணியாற்றிட இயலாமல் போய்விடுகிறது. அதிகாரிகளுக்கு பணிச்சுமை இருப்பதால் மக்கள் பிரச்சனைகளை கையாள்வதில் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது.

எனவே மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கும், மக்கள் பிரச்சனைகளை கையாள்வதற்கும் ஏதுவாக மக்கள் பிரதிநிதிகளுக்கு உதவிடும் வகையில் தேர்தல் நடத்தை விதிகளை சற்றே தளர்த்தி அவர்களது அலுவலக சீல்களை அகற்றி மக்கள் பணியாற்றிட வழிவகை செய்திட வேண்டும் என பொதுமக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். எனவே மக்கள் பிரதிநிதிகள் தங்களது பகுதி மக்களுக்கு சேவை செய்திடும் வகையில் தேர்தல் ஆணையம் தனது விதிகளை சற்றே தளர்த்தினால் கோடை கால குடிநீர் பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை சமாளித்திட முடியும் என சமூக ஆர்வலர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## முதன்முறையாக தமிழில் கார்ட்டூன் நெட்வொர்க்கில் ஒன் பீஸ்: லேண்ட் ஆஃப் வானோ ஆர்க் ஒளிபரப்பு

**சென்னை, ஏப் 27-**

கலாசார நிகழ்வும் மற்றும் காவியமான கடற்கொள்ளையர் சாகசக் கதையும் இந்தியாவில் உள்ள கார்ட்டூன் நெட்வொர்க்கில் உலகம் முழுவதிலும் உள்ள கப்பல்துறைகளை தழுவியது.கார்ட்டூன் நெட்வொர்க் இன்று இந்தியத் தொலைக்காட்சியில் ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் முதன்முறையாக அதன் ஒன் பீஸ் லேண்ட் ஆஃப் வானோ ஆர்க் கதைக்களத்துடன் உலகளவில் பாராட்டப்பட்ட மங்கா தொடரான 'ஒன் பீஸ்' வருகையை அறிவித்தது. கோடை காலத்திலும், பிரபலமான ஜப்பானிய அனிம் ஸ்லேட்டின் கேச் சேமிப்பிலும் மிளிரச் சேர்க்கும் வகையில், அட்ரினலின்-பம்ப்பிங், திகைப்பூட்டும் சாகசங்களை லூஃபி மற்றும் மற்ற ஸ்ட்ரா ஹாட்ஸ் பைரேட்ஸ் சேனல் வழங்குகிறது, மே 5-ம் தேதி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அதன்பின் திங்கட்கிழமை மதியம் 1:00 மணிக்கு தொடங்குகிறது. வெள்ளிக்கிழமை வரை இரவு 9:00 மணிக்கு.கலாசார நிகழ்வும் மற்றும் காவியமான கடற்கொள்ளையர் சாகசக் கதையும் இந்தியாவில் உள்ள கார்ட்டூன் நெட்வொர்க்கில் உலகம் முழுவதிலும் உள்ள கப்பல்துறைகளை தழுவியது.

கார்ட்டூன் நெட்வொர்க் இந்தியத் தொலைக்காட்சியில் ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் முதன்முறையாக அதன் "ஒன் பீஸ்: லேண்ட் ஆஃப் வானோ ஆர்க்" கதைக்களத்துடன் உலகளவில் பாராட்டப்பட்ட மங்கா தொடரான 'ஒன் பீஸ்' வருகையை அறிவித்தது. கோடை காலத்திலும், பிரபலமான ஜப்பானிய அனிம் ஸ்லேட்டின் கேச் சேமிப்பிலும் மிளிரச் சேர்க்கும் வகையில், அட்ரினலின்-பம்ப்பிங், திகைப்பூட்டும் சாகசங்களை லூஃபி மற்றும் மற்ற ஸ்ட்ரா ஹாட்ஸ் பைரேட்ஸ் சேனல் வழங்குகிறது. மே 5-ம் தேதி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அதன்பின் திங்கட்கிழமை மதியம் 1:00 மணிக்கு தொடங்குகிறது. வெள்ளிக்கிழமை இரவு 9:00 மணிக்கு வரை வழங்குகிறது.



திண்டுக்கல் தாடிக்கொம்பு ஸ்ரீ சவுந்தரராஜா பெருமாள் சித்ரா பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு திண்டுக்கலில் நகர்உலாவந்துமலையடிவாரம்ஸ்ரீஐயப்பன்திருக்கோவிலில் பக்தர்களுக்குஅருள்பாலித்தார்.விழாவிற்கானஏற்பாட்டினை சங்க செயலாளர் சந்தானகிருஷ்ணன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சிறப்புற செய்திருந்தனர்.

## சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் டாபர் ரெட் பேஸ்ட் பார்ட்னர்கள்

**சென்னை, ஏப் 27-**

இந்திய பல் மருத்துவ சங்கத்தின் சமீபத்திய கணக்கெடுப்பின்படி, ஏறக்குறைய 80% இந்தியர்கள் பல் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர், கணிசமான சதவீதத்தினர் தங்கள் நிலையை அறியவில்லை. அணுகக்கூடிய வாய்வழி சுகாதாரத்திற்கான இந்த அழுத்தமான தேவையை உணர்ந்து, டாபர் ரெட் பேஸ்ட் அவர்களின் வாய்வழி பராமரிப்பு விழிப்புணர்வு மாதத்திற்காக ஸ்மார்ட் பஜார் உடன் இணைந்து, ஒரு முன்னோடி முயற்சியைத் தொடங்கியுள்ளது. டாபர் இந்தியா லிமிடெட்டின் மார்க்கெட்டிங் தலைவர் அகஸ்டஸ் டேனியல், "டாபர் ரெட் பேஸ்ட், உலகின் முன்னணி ஆயுர்வேத டூத்பேஸ்ட், சிறந்த ஆயுர்வேதத்தைக் கொண்டு வருவதன் மூலம் இந்தியாவின் வாய்வழி ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பணியில் உள்ளது என்றார். டாக்டர் பத்மா கடியார், நிறுவனர்- ஸ்மைலோ.ஏஐ, "இந்த முன்னோடி முயற்சியில் டாபர் ரெட் பேஸ்ட் மற்றும் ஸ்மார்ட் பஜாருடன் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஸ்மைலோ.ஏஐ, வாய்வழி பராமரிப்புப் பிரச்சினையை மாற்றியமைப்பதில் தொழில்நுட்பம் என்ன சாதிக்க முடியும்? என்பதற்கான எல்லைகளைத் தள்ள நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் ஏஐ தொழில்நுட்பம் மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டது: இது பயனர்களுக்கு கல்வி மற்றும் அதிகாரம் அளிக்கிறது. முன்னர் அடைய முடியாத வழிகளில் பல் ஆரோக்கியத்தை மேம்படுத்து கிறது என தெரிவித்துள்ளனர்.

## சந்தா சந்தையை மறுவரையறை செய்யும் ஜியோ சினிமா பிரீமியம் திட்டங்கள்

**சென்னை, ஏப். 27**

இந்தியன் பிரீமியர் லீக்கின் அபரிமிதமான வெற்றி மற்றும் விரைவு பெற்ற பொழுதுபோக்குடன், ஒவ்வொரு இந்திய குடும்பத்திலும் பிரீமியம் பொழுதுபோக்குக்கான இடமாக ஜியோ சினிமா தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. இப்போது, சாதனக் கட்டுப்பாடுகள், குறைந்த தரமான வீடியோ மற்றும் அதிகவிலை சந்தா திட்டங்கள் போன்ற முக்கிய நுகர்வோர் குறுக்கீடுகளைத் தீர்த்து, JioCinema அதன் புதிய சந்தா சலுகையான 'ஜியோ சினிமா பிரீமியம்'ஐ அறிவித்தது. சந்தையை வரையறுக்கும் ரூ.29/மாதம் தொடங்கும் புதிய திட்டங்கள் 4K தரம் மற்றும் ஆஃப்லைன் பார்வை விருப்பங்களில் விளம்பர இலவச அனுபவத்தை வழங்கும். இணைக்கப்பட்ட டிவிகள் உட்பட எந்தச் சாதனத்திலும் உறுப்பினர்கள் பிரத்தியேகத் தொடர்கள், திரைப்படங்கள், ஹாலிவுட், குழந்தைகள்டிவி பொழுது போக்குகளை அணுகலாம். இந்திய குடும்பங்கள் முழுவதும் பல-பிரிவு நுகர்வுகளை மையமாகக் கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.89க்கு ஒரு 'குடும்ப' திட்டமும் அறிவிக்கப்பட்டது. இது 4 ஒரே நேரத்தில் திரைகளை அணுகுவதற்கான கூடுதல் பலனை வழங்குகிறது. தற்போதுள்ள ஜியோ சினிமா பிரீமியம் உறுப்பினர்கள் கூடுதல் கட்டணமின்றி 'குடும்ப' திட்டத்தின் அனைத்து கூடுதல் பலன்களையும் அனுபவிப்பார்கள். தற்போதைய இந்தியன் பிரீமியர் லீக் உள்ளிட்ட விளையாட்டு உள்ளடக்கம் மற்றும் ஆயிரக்கணக்கான மணி நேர பொழுதுபோக்கு உள்ளடக்கம் அதன் விளம்பர ஆதரவு சலுகையின் ஒரு பகுதியாக தொடர்ந்து இலவசமாகக் கிடைக்கும்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## மேலூர் அரசு பள்ளியில் கோடை கால விளையாட்டு பயிற்சி முகாம்



**மேலூர் ஏப் 27**

மேலூர் தாலுகா ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் எம்.எப்.சி இணைந்து நடத்தும் 2-ம் ஆண்டு கோடைகால விளையாட்டு பயிற்சி முகாம்-2024 துவக்க விழா மேலூர் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதனை மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஜாஸ் பள்ளி ஷாம், டைல்ஸ் பார்க் முரளி, முரளி, சந்திரன், முருகன், சூர்யா ஆசிரியர் நாகராஜன், கோபால், பிரேம்குமார், பிளாக் பாரஸ்ட் தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப் பயிற்சி முகாமானது 24ந் தேதி துவங்கி 5 ந்தேதி வரை 10 நாட்கள் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீராங்கனைகளுக்கு இலவசமாக டீ-சர்ட், தினமும் பால், முட்டை, பயறு வகைகள் வழங்கப்படுகிறது. நிறைவு நாளன்று வீரர்களுக்கும், வீரர்களின் பெற்றோர்களுக்கு விளையாட்டு போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன. விழா முடிவில் தாலுகா ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் கே. பாலகிருஷ்ணன் வரவேற்று உரையாற்றினார்கள்.இந்த பயிற்சி முகாம் மேலூர் தாலுகாவை சேர்ந்த சிறுவர் சிறுமியர் பயன்படுத்திக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பாகும். விழாவின் சிறப்பு அம்சமாக உலக அமைதிக்காக புறாக்கள் பறக்க விடப்பட்டன.

## நத்தம் பகுதியில் விற்பனைக்கு வந்த வாட்டர் ஆப்பிள் பழங்கள்

**நத்தம், ஏப், 27**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மா, பலா, வாழை, கொய்யா, பப்பாளி, சப்போட்டா, நாவல், மற்றும் சீத்தா உள்ளிட்ட பல்வேறு பழ வகைகள் ஆங்காங்கே சாகுபடி செய்யப்பட்டு, அந்தந்த காலகட்டங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இந்தநிலையில் தற்போது வாட்டர் ஆப்பிள் பழ அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. அதிக இனிப்பு, சுவைகள் நிறைந்த நீர் ஆப்பிள் பழத்தை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வத்துடன் வாங்கி சாப்பிடுவார்கள்.இதையொட்டி அறுவடை செய்யப்பட்ட வாட்டர் ஆப்பிள் பழங்கள் மார்க்கெட்டுகளில் விற்பனைக்காக குவிந்துள்ளது. குறிப்பாக நத்தம் பஸ் நிலையம் மற்றும் மார்க்கெட்டில் வியாபாரிகள் வாட்டர் ஆப்பிள் பழத்தை விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ வாட்டர் ஆப்பிள் பழம் ரூ.80 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது. இளம் சிவப்பு வண்ணத்துடன், அதிக நீர்ச்சத்து கொண்ட இந்த ஆப்பிள் பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்தது. வாட்டர் ஆப்பிளில், வைட்டமின் சி, ஏ, பி1, பி3, இரும்புச்சத்து, கால்சியம், பொட்டாசியம் ஆகிய பல்வேறு சத்துக்கள் நிறைந்துள்ளதாகவும், இதிலுள்ள பிளேவனாய்டுகள் எனும் பினாலிக் கலவைகள், இதயநோய், புற்றுநோய் மற்றும் மூட்டுவலி போன்ற பிரச்சினைகளுக்குச்சிறந்த தீர்வாக அமைகிறது எனவும் சொல்லப்படுகிறது

### வீடு கட்ட அனுமதி வழங்க லஞ்சம்:

# திருவில்லி நகராட்சி கட்டிட ஆய்வாளர் கைது

**விருதுநகர். ஏப்.27.**

ஸ்ரீவில்லிபுத்தூர் நல்ல குற்றாலம் தெருவை சேர்ந்தவர் வாசுதேவன் வயது 48 இவர் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறார். இவருக்கு சொந்தமான இடம் ஸ்ரீவில்லிபுத்தூர் சிங்கம்மாள் கிராமம் பகுதியில் உள்ளது. அதில் வீடு கட்ட அவர் முடிவு செய்தார். எனவே நகராட்சியில் வீடு கட்ட விண்ணப்பித்து விட்டு கட்டிட பிளான் அலுவலகத்தில் கட்டிட அமைப்பு வரைவு ஆய்வாளர் ஜோதிமணியிடம், 56, என்பவரிடம் அனுமதி கோரி உள்ளார். மேலும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தையும் முறையாக செலுத்துள்ளார். மேலும் இது தொடர்பாக நேற்று கட்டிட அமைப்பு வரைபட ஆய்வாளர் ஜோதி மணியை அனுகிய போது அவர் தனக்கு பத்தாயிரம் லஞ்சம் தர வேண்டும் என கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த வாசுதேவன் விருதுநகரில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு சென்று ஏடிஎஸ்பி ராமச்சந்திரன் இன்ஸ்பெக்டர் பூமிநாதன் சால்வன் துரை ஆகியோரிடம் புகார் அளித்தார். அந்த புகார் அடிப்படையில் நேற்று ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு வந்த லஞ்ச ஒழிப்புத் துறையினர் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை வாசுதேவனிடம் கொடுத்து அனுப்பி அந்த10,000 ரூபாயை லஞ்சம் வாங்கும் போது மறைந்திருந்து லஞ்ச ஒழிப்பு போலீசார் கையோடு பிடித்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு வந்து பெண் அதிகாரி ஜோதி மணி பிடிபட்ட சம்பவம் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பெரும்பாலான நகராட்சி அலுவலர்கள் கிளம்பி சென்று விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## ஒட்டன்சத்திரம் நகராட்சி சார்பில் நீர் பந்தல்




**ஒட்டன்சத்திரம் ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் மாவட்ட ஆட்சியர் எம்.என். பூங்கொடி ஆலோசனையின் பேரில் பொதுமக்களை வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க பேருந்து நிலையம், தாராபுரம் சாலை ரவுண்டானா, தும்பிச்சம்பட்டிபிரிவு ஆகிய மூன்று இடங்களில் தண்ணீர் பந்தல் திறக்கப்பட்டது. நிகழ்வில் ஆணையாளர் ஆறுமுகம், பொறியாளர் சுப்பிரமணிய பிரபு, இளநிலை உதவியாளர் ஈஸ்வரன், அரசுஒப்பந்ததாரர் முத்துக்கண்ணன், உள்ளிட்ட நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்

**காணவில்லை**

கடந்த 01.06.2023ந் தேதி சிவகங்கை கோர்ட்டு வாசல் அருகே வரும்போது கைபையில் இருந்த அசல் கடன்ஈடு ஆவண எண்.537/2005 சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் பதிவு செய்த அசல் ஆவணம் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் கடன்ஈடு ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தனலெட்சுமி
24/5 லெட்சுமணன் தெரு
மேலூர் ரோடு
சிவகங்கை.
செல் எண்.9841479925

**காணவில்லை**

எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி, நாடார் தெருவில் வசிக்கும் (லேட்) சக்திவேல் மகன் S. கார்த்திகை ராஜா வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்கள். 6462/2012, 5465/2012 ஐ கடந்த 8-4-2024ம் தேதியன்று தேவதானபட்டியில் ஸ்டேட் பேங்க் எதிரில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து வந்த சமயம் வீட்டில் வந்து பார்த்தபோது மேற்படி அசல் ஆவணங்கள் காணாமல் போய் இருந்தது. மேற்படி அசல் ஆவணங்களை எங்கு தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. இதுகுறித்து காவல்துறைக்கு ஆன்லைன் மூலம் புகார் செய்யப்பட்டு CNK24178739 என்ற எண்ணில் பதிவாகியுள்ளது. எனவே மேற்படி அசல் ஆவணங்கள் யாரிடமாவது கிடைக்க பெற்று இருந்தால், மேற்படி அசல் ஆவணங்களை அடியில்கண்ட விலாசத்தில் ஒப்படைக்குமாறு வேண்டி இந்த அறிவிப்பு எமது கட்சிக்காரருக்காக செய்யலாயிற்று.

C. மோகன்ராஜ், எம்.காம்., எம்.எல்.,
வழக்கறிஞர், Roll No.MS.523/1989
60, தர்மலிங்கபுரம், சில்வார்பட்டி, பெரியகுளம் தாலுகா,
தேனி மாவட்டம். 625 602. செல் : 94865 55553

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within THREE months thereafter I, S.KALAIYARASI, D/O. Selvam, Aged 22 Years, Permanently residing at 4/115D,Laws Ghat Road, AnnaNagar, Kodaikanal Town, Dindigul District 624 101. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.

Those who have any valid Objections may notify the same to the Bar council within 10 days.

S.KALAIYARASI
Place: KODAIKANAL
Date: 27.04.2024

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within THREE months thereafter I, S.POONGAVANAM, D/O. Selvaraj, Aged 23 Years, Permanently residing at 732/W3,B.L.Shed, B.L.Shed(Post), Kodaikanal Taluk, Dindigul District 624 101.Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid Objections may notify the same to the Bar council within 10 days.

S.POONGAVANAM
Place:KODAIKANAL
Date:27.04.2024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
இராஜபாளையம்
O.S.No.37/2023
கி.கோவிந்தம்மாள்
...வாதி
/எதிரிடை/
1. தாசில்தார் - இராஜபாளையம்
2. மாவட்ட ஆட்சியர் - விருதுநகர்
3. தனுஷ்கோடி
4. முனியம்மாள்
5. இசக்கிராஜ்
...பிரதிவாதிகள்
அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் கணவர் திரு. கிருஷ்ணன் என்பவருக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி மனுதாரர் சார்பில் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ஷை வழக்கு வருகின்ற 27.06.2024ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை வழக்கில் யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் வருகின்ற 27.06.2024ம் தேதி காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சம் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
வழக்கறிஞர்,
ஆர்.விஜய் ஆனந்த்,
M.Com., L.L.B.,
செல்-8270130144
இராஜபாளையம்.

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.132/2024/ஆ6
இ.ப.வ.எண்.363/2023/ஆ6
பெருமாள்,
த/பெ. கோவிந்தன்,
அய்யம்பாளையம் கிராமம்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிர்/
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரரின் தந்தை கோவிந்தன் என்பவர் கடந்த 25.10.1996ம் தேதி ஷை முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம். தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.10075/2023/ஆ6
இ.ப.வ.எண்.303/2023/ஆ6
மு. ஈஸ்வரன்,
த/பெ. முத்துச்சாமி,
1/314, செட்டிநாயக்கன்பட்டி,
திண்டுக்கல்.
...... மனுதாரர்
//எதிர்/
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரரின் பாட்டி பாப்பாத்தி என்பவர் கடந்த 06.09.2020 ம் தேதி 32 C, கள்ளர் தெரு, கிழக்கு காப்பிளியபட்டி, திண்டுக்கல் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம். தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.10052/2023/ஆ6
இ.ப.வ.எண்.185/2023/ஆ6
காமையன்,
த/பெ. சுப்பையா கவுண்டர்,
க.எண் 13, பரதேசி
கவுண்டன்பட்டி, ராகலாபுரம்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிர்/
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரரின் தந்தை சுப்பையா கவுண்டர் என்பவர் கடந்த 17.04.1981ம் தேதி ஷை முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம். தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.658/2024/ஆ6
இ.ப.வ.எண்.05/2024/ஆ6
முருகன், த/பெ. பொன்ராஜ்,
பிள்ளையார் கோவில் தெரு,
சிறுநாயக்கன் பட்டி,
பிள்ளையார் நத்தம்,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிர்/
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரரின் தந்தை பொன்ராஜ் என்பவர் கடந்த 18.07.2017ம் தேதி ஷை முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம். தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
இராமநாதபுரம்
இ.ம.எண்.416 /2022
மு.வ.எண்.271/1996
1. சரஸ்வதி,
.... மனுதார்/வாதி
-எதிர்-
1. V.பொன்னுத்துரை,
த/பெ. P. வேலு நாடார்,
சாலை வலசை கிராமம்,
இருமேனி அஞ்சல்,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
2. S.மகேஸ்வரன்,
த/பெ. P.சௌந்தரபாண்டியன் நாடார்,
சாலை வலசை கிராமம்,
இருமேனி அஞ்சல்,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
.... எதிர்மனுதார்கள்/
5,9 எதிர்மனுதார்கள்
அறிவிப்பு
ஷை வழக்கில் கண்ட மனுதார்/வாதி எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை இறுதிநிலை தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்துள்ளதில் ஷை மனுவில் கண்ட மேற்சொன்ன உத்தேச 5,9 எதிர்மனுதார்கள் சமூகம் நீதிமன்றத்தில் 06.06.2024-ம் தேதி காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்றும், தவறும்பட்சத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை எனக் கருதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
J.முஹம்மது சுல்த்தான்,B.A.B.L.,
J.M.ஹஸனுல் பஸரி,B.A.B.L.,
M.முகைதீன் இபுராம்சா,B.A.B.L.,
அட்வகேட்ஸ்.இராமநாதபுரம்.

தேனி டி.மு. கோர்ட்டு
O.S. No.99/2023
கிளை மேலாளர்,
யூனியன் பேங்க் ஆப் இந்தியா,
அல்லிநகரம்.
... வாதி
... எதிர் ...
F. குமாரி
க/பெ பிரான்சிஸ்,
79A, G.H. ரோடு, தேனி.
... பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி வாதி பிரதிவாதி பேரில் அசல் வழக்கு 99/2023ல் கடன் தொகை வசூல் செய்ய பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து கொண்டதில் வரும் 06.06.2024ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. அது விசயமாக பிரதிவாதிகளுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒரு தலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்படும்.
திரு. T.அம்பாசங்கர்,
பி.ஏ., பி.எல்.,
திரு. A.ஜெகநாதன்,
பி.ஏ., பி.எல்.,
திருமதி. S.பானுமதி,
பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர்கள், பெரியகுளம்.

# அரசு பேருந்து ஓட்டுநர் நடத்துனர்களுக்கு வெயில் தாக்கத்தை குறைக்க நீராகாரம் வழங்கல்



**திண்டுக்கல், ஏப். 27-**

தமிழ்நாடு அரசு உத்தரவுப்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், கோட்டத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் திண்டுக்கல் மண்டலத்தின் பொது மேலாளர் ஆகியோர்களின் அறிவுறுத்தலின்படி திண்டுக்கல் மண்டலத்திலுள்ள திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டத்திலுள்ள 15 பணிமனைகள் மூலம் இயக்கப்படும் 798 வழித்தடங்களில் பணிபுரியும் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கு தற்போது நிலவும் வெயிலின் தாக்கத்தின் பாதிப்பை தவிர்க்க உப்பு சர்க்கரை கலந்த நீர் கரைசல் அந்தந்த மேலாளர்கள் மூலம் வழங்கப்பட்டது. கிளை பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு வழக்கம் போல தங்களது பணியை தொடங்கினார்கள்.

இதனை பருகிய ஓட்டுனர்கள் நடத்துனர்கள் கடுமையான வெயில் உஷ்ணத்தில் பேருந்துகளில் பயணம் செய்யும்பொழுது மிகவும் கஷ்டமாக இருந்த சூழ்நிலையில் அரசு போக்குவரத்து கழகம் சார்பில் கொடுக்கப்பட்ட ஓ ஆர் எஸ் எனும் கரைசல் எங்களுக்கு உத்வேகத்தை அளித்துள்ளது என்றனர். இந்நிகழ்ச்சியை திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் டேனியல் சாலமன் தொடங்கி வைத்தார்.

# மஞ்சள் ஒட்டுப்பொறி குறித்து செயல் விளக்கம்



**ஒட்டன்சத்திரம், ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில்,வேடசந்தூர் எஸ்.ஆர்.எஸ். வேளாண்மை தொழில் நுட்ப கல்லூரி மாணவிகள் சுவேதா, ஸ்வாதி,ஸ்வேதா,தருணிகா,வனஜா ஸ்ரீ,விந்தியா,வினோதினி,அம்மு கிராமப்புற பணி அனுபவத்திட்டத்தின் கீழ் விருப்பாட்சி கிராமத்தில் மஞ்சள் நிற ஒட்டும் பொறி பற்றி விவசாயிகளுக்கு விவரித்து செயல் விளக்கம் அளித்தனர். மஞ்சள் ஒட்டும் பொறி சார் உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த வும்,கண்காணிக்கவும் உதவுகிறது.

மஞ்சள் நிற எண்ணெய் பெயிண்ட்,அட்டை அல்லது எண்ணெய் டின்,மூங்கில்,பி.வி.சி. பைப்,வெள்ளை கிரீஸ் ஆகியவற்றை பயன்படுத்தி குறைந்த செலவில்,பூச்சிக்கொல்லி இல்லாமல் தென்னையில் ருகோஸ் சுருள்வெள்ளை ஈக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கலாம் என்பதை மாணவிகள் விவசாயிகளுக்கு பரிந்துரைத்தனர்.



மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் ஒத்தக்கடையில் நீர் மோர் பந்தலை மாவட்ட செயலாளர் ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொது மக்களுக்கு இளநீர் வெள்ளரிக்காய் சர்பத், நீர் மோர் திராட்சை பழங்களை வழங்கினார், அருகில் பெரிய புல்லான் எம் எல் ஏ, வேட்பாளர் டாக்டர் சரவணன், தக்கார் பாண்டி, வக்கீல் ரமேஷ் நிலையூர் முருகன், கார் சேரி கணேசன், வாசு, அரசு, கார்த்திகேயன் , தேவா,ராஜேந்திரன், சேனாதிபதி, தினேஷ்குமார், கணேசமூர்த்தி, ஆண்டி சுரேஷ், வக்கீல் கோபி, ஜீவானந்தம், கண்ணகி பாஸ்கர், சசிகலா, மேலூர் சரவணகுமார், சாகுல் ஹமீது, வண்டியூர் குமார், மகாராஜன், மகேஸ்வரன், ராஜேஷ், பெரிய செல்வம், ஐயப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

# பணத்தை மோசடி செய்ததாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளால் திருமங்கலத்தில் பரபரப்பு

**திருமங்கலம், ஏப். 27-**

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் பூத் ஏஜென்ட்களுக்கு கொடுக்கப்பட்ட பணத்தை பா.ஜ.க தேர்தல் பணிக்குழுவினர் மோசடி செய்ததாக கூறி திருமங்கலம் பகுதியில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் பா.ஜ.க வேட்பாளராக ராதிகா சரத்குமார் போட்டியிட்டார்.இந்நிலையில் வோக்குப்பதிவு நாளான்று வாக்குச்சாவடியில் கட்சிப் பணியிலிருக்கும் பூத் ஏஜென்ட்களுக்கு கட்சியிலிருந்து பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை விருதுநகர் பாராளுமன்ற தேர்தல் பணிக்குழுவினர் மோசடி செய்து விட்டதாக பாஜகவின் ஒருபிரிவினர் குற்றம்சாட்டி வருகின்றனர். இதனிடையே திருமங்கலம் பகுதியில் நடவடிக்கை எடு, நடவடிக்கை எடு என்ற தலைப்பில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில், பா.ஜ.க விருதுநகர் பாராளுமன்றம் தேர்தல் பணிக்குழுவினர் செய்த மோசடி, பூத் ஏஜென்டுகளுக்கு கொடுக்கப்பட்ட நிதியில் சுமார் 40லட்சம் வரை சுருட்டிய நபர்கள் மீது நடவடிக்கை எடு என்றும் அதில் பாஜக பாராளுமன்ற அமைப்பாளர் வெற்றிவேல்,மதுரை மேற்கு மாவட்ட தலைவைர் சசிக்குமார்,மதுரை மேற்கு மாவட்ட செயலாளர் சின்னச்சாமி,மதுரை மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் சின்னஇருளப்பன் இவர்கள் மீது பா.ஜ.க மாநில தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும், திருமங்கலம் சட்டமன்ற தொகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.திருமங்கலம் பகுதியின் பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகள் பா.ஜ.க வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தி இருப்பதுடன் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

# சிவகாசியில் பிரசித்தி பெற்ற சிவன் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா

**விருதுநகர், ஏப். 27-**

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில், பிரசித்தி பெற்ற சிவன் கோவிலின் மகா கும்பாபிஷேகம் விழா கோலாகலமாக நடைபெற்றது. சிவகாசியில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான சிவன் கோவில் உள்ளது.

பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததும், புராண சிறப்பு மிக்க இந்த சிவன் கோவிலில், கடந்த ஒரு வருடமாக புனரமைப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வந்தன. கோவிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீவிஸ்வநாதர் சுவாமி, ஸ்ரீ விசாலாட்சி அம்மன், ஸ்ரீநடராஜர், பைரவர் உள்ளிட்ட அனைத்து சுவாமி சந்நதிகளும் முழுமையாக, பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சீரமைப்பு பணிகள் நிறைவு பெற்றதையடுத்து மகா கும்பாபிஷேக பணிகள் துவங்கியது. கடந்த 5 நாட்களாக மகா யாகசாலை பூஜைகள் நடைபெற்று வந்தன. பல்வேறு இடங்களிலிருந்து எடுத்துவரப்பட்ட புனிதநீர் கலசங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர், சிவச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க ஸ்ரீவிஸ்வநாதர் சுவாமி சந்நதி, ஸ்ரீவிசாலாட்சி அம்மன் சந்நதி, பரிவார தெய்வங்களின் சந்நதிகள் மற்றும் கோவில் நுழைவு வாயில் கோபுரங்களில் உள்ள கலசங்களில் சிவச்சாரியர்கள் புனிதநீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

கும்பாபிஷேகம் நிகழ்ச்சியில் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். சிவகாசி நகரின் முக்கிய இடங்கள் பலவற்றிலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள், கோவில் நிர்வாகம் மற்றும் நிகழ்ச்சி உபயதாரர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# நத்தம் அருகே பகவதி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



**நத்தம், ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குமரபட்டியில் பகவதி அம்மன்,வெற்றி விநாயகர், பழனி ஆண்டவர் கோவில்களில் கும்பாபிஷேக விழா நடந்தது.இதையொட்டி நேற்று மங்கள இசை, திருமறை, கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், தனி பூஜை, வாஸ்து சாந்தி, திக் பந்தனம், பிரவேச பலி, விருச்சகிரணம், அங்குரார்பணம், ரக்ஷா பந்தனம், முதற்கால யாகசால பூஜை ,வேத பாராயணம், திருவியாகுதி, மூல மந்திரஹோமம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து இன்று நான்காம் கால யாகசாலை பூஜைகளுக்கு பின் ஏற்கனவே யாகசாலையில் வைக்கப்பட்டிருந்த காசி, ராமேஸ்வரம், அழகர்மலை, கரந்தமலை உள்ளிட்ட பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்ததக்குடங்கள் மேளதாளம் முழங்க கோபுர உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது. பின்னர் அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டது.

அப்போது வானத்தில் கருடன் வட்டமிட்டது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

அவர்களுக்கு புனித தீர்த்தமும், பூஜை மலர்களும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை குமரபட்டி ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# சிலுக்குவார்பட்டி அருகே நடந்த விபத்தில் ஒருவர் பலி

**வத்தலகுண்டு ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை சிலுக்குவார்பட்டி அருகே பொட்டிசெட்டி பட்டியைச் சேர்ந்த பாலகுரு என்பவர் கொடை ரோடு நோக்கி தனது இரண்டு சக்கர வாகனத்தில் வந்து கொண்டு இருந்தார் அது சமயம் எதிர்பாராத விதமாக நடந்து சென்றவர் மீது மோதியதில் இருவரும் தூக்கி வீசப்பட்டனர்.

இதில் இரண்டு சக்கர வாகனத்தில் வந்தவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். நடந்து சென்றுவரும் நிலையில் அங்கிருந்து பொதுமக்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்தில் பலியான நபரின் உடலை போலீசார் நிலக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து சம்பந்தமாக நிலக்கோட்டை காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜே.இ.இ. மெயின் 2024 தேர்வில் வெற்றி பெற்ற வேதாந்து மாணவர்கள்

**சென்னை, ஏப் 27-**

ஜேஇஇ அட்வான்ஸ்டு தேர்வில் 1,698 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளதாக வேதாந்து ஆசிரியர் தெரிவித்துள்ளார். 210 மாணவர்கள் 99 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றதாகவும், 641 மாணவர்கள் 97 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றதாகவும் கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது. வேதாந்துவின் சிறந்த மாணவர்களில் ஒருவரான பிரணவனந்த் சாஜி, ஜே. இ. இ மெயின் 2024 இன் வெளிநாட்டு முதலிடமாக அகில இந்திய தரவரிசையில் (AIR) 31 வது இடத்தைப் பிடித்தார். மேலும், முதல் 500 இடங்களில் 3 வேதாந்து மாணவர்களும், முதல் 1,000 இடங்களில் 6 வேதாந்து மாணவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

மேலும் 27 வேதாந்து மாணவர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் 100 சதவீத மதிப்பெண்கள் பெற்றனர். இது குறித்து வேதாந்துவின் தலைமை நிர்வாக அதிகாரியும், இணை நிறுவனருமான வம்சி கிருஷ்ணா கூறுகையில், மாணவர்களின் அற்புதமான செயல்திறன் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, “இந்த வெற்றி எங்கள் மாணவர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் வேதாந்துவின் கற்பித்தல் முறையின் செயல்திறனுக்கு ஒரு சான்றாகும். இதை அதிகரிக்க, எங்கள் வேதாந்து கற்றல் மையங்களின் விரிவாக்கத்தில் நாங்கள் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம், இது அதிக மாணவர்களைச் சென்றடையவும், அவர்களின் கல்வி பயணத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவும் என்று கூறினார்.

# ராமநாதபுரம் மாவட்டத்தில் அங்கக சான்று பெறும் நடை முறைகள் விபரம்

**ராமநாதபுரம்,ஏப்.27-**

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் அங்கக சான்று பெறும் நடைமுறைகள் குறித்து விவசாய துறையினர் அறிவித்துள்ளனர்.

அங்கக வேளாண்மையில் செயற்கை ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை தவிர்த்து தனிமைப்படுத்தப்பட்ட பண்ணைகளிலிருந்து இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே பயன்படுத்தி இயற்கை வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் முறையே அங்கக வேளாண்மை எனப்படுகிறது. அங்கக வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் தனி நபராகவோ அல்லது குழுவாகவோ பதிவு செய்து கொள்ளலாம். மேலும் அங்கக விளை பொருட்களை பதப்படுத்துவோர் வனிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். அங்ககச் சான்று பெற விவசாயிகள் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், பண்ணையின் பொது விபா குறிப்பு பண்ணையின் வரைபடம், ஆண்டு பயிர்த்திட்டம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விபரம், துறையுடனான ஒப்பந்தம், நில ஆவணம், நிரந்தர கணக்கு எண், ஆதார் அட்டை நகல் மற்றும் விண்ணப்பதாரரின் கடவுச் சீட்டு அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் சான்று கட்டணத்தை செலுத்த வேண்டும். விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு, தேனி வளர்ப்பு, வனப்பொருள் சேகரிப்பு செய்வோரும் வணிகம் மற்றும் எற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். பதிவு கட்டணம், ஆய்வு சார்ந்த கட்டணம், பயண நேரம் கட்டணம் மற்றும் சான்று கட்டணமாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.2700- பிற விவசாயிகள் ரூ.3200 - விவசாயிகள் குழுப்பதிவிற்கு ரூ.7200 - மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ரூ.9400 - என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் அங்கக வேளாண்மையில் ஈடுபடும் தனிப்பட்ட விவசாயிகள் மற்றும் குழுக்கள் அமைத்து உரிய கட்டணம் செலுத்தி தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தின் கீழ் பதிவு செய்து சான்று பெற்று வருகின்றனர். மேலும் தற்பொழுது ஒரே வட்டாரத்தில் உள்ள ஒரே கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த அங்கக விவசாயம் செய்யும் விவசாயிகள் ஒரு குழுவாக அமைத்து எவ்வித கட்டணமும் இல்லாமல் பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் அங்ககச் சான்று பெறலாம். அங்கக முறைப்படி விவசாயம் செய்வோம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டு புகைப்படம் ஒட்டிய விண்ணப்பத்துடன் பதிவு செய்ய வேண்டும். திட்டத்தில் கட்டணமின்றி எளிமையான முறையில் பதிவு செய்வதால் விவசாயிகளுக்கு பயனுள்ளதாகவும், அதிக அளவில் விவசாயிகள் அங்ககச் சான்று பெற முடியும். எனவே அங்கக வேளாண்மை செய்யும் விவசாயிகள் குழுவாக இணைந்து பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் கட்டணம் இல்லாமல் அல்லது மத்திய அரசின் தேசிய அங்கக வேளாண்மை செயல்திட்டத்தின்படி கட்டணம் செலுத்தியும் பதிவு செய்து அங்கக சான்று பெற்று பயன் பெறலாம். இதுதொடர்பான தகவலை உழவர் மையம், ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகம் ( தலைமை அரசு மருத்துவமனை எதிரில்) ராமநாதபுரம், என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மாவட்ட விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பெற்று பதிவு செய்து பயன் பெறலாம். இந்த தகவலை ராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குனர் சிவகாமி தெரிவித்துள்ளார்.

# வடுகபட்டி பேரூராட்சி அ.தி.மு.க. சார்பில் நீர்மோர் பந்தல்



**தேனி, ஏப். 27 -**

தேனி மாவட்டம் வடுகபட்டி பேரூராட்சி அதிமுக சார்பில் நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது.

கோடை காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் தாகம் தணிக்கும் வகையில் வடுகபட்டி பேரூராட்சி அதிமுக சார்பில் நீர்மோர் பந்தல் அமைக்கப்பட்டது. இந்நீர்மோர் பந்தல் திறப்பு விழா நேற்று வடுகபட்டி பேரூராட்சி செயலாளர் பாலமுருகன் தலைமையில் பெரியகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராஜகுரு, அன்னப்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட கழக செயலாளர் முறுக்கோடைராமர் நீர்மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், தர்பூசணி, குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கி துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பாராளுமன்ற வேட்பாளர் நாராயணசாமி, நிர்வாகிகள் வழக்கறிஞர் ஜெயராமன், செல்லப்பாண்டி, அய்யப்பன் மற்றும் அப்பாஸ்மைதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# என்டர்ப்ப்ரைஸ் எப் எக்ஸ் கார்ப்பொரேட் பயண கார்டை தாமஸ்குக் நிறுவனம் அறிவித்தது

**சென்னை, ஏப் 27-**

இந்தியாவில் வணிக சந்தை தற்போது 30 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகா உள்ளது மேலும் 2030ல் மூன்று மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாமஸ் குக்கின் அந்நிய செலாவணி ப்ரீபெய்ட் கார்டு தரவின் படி தாமஸ் குக் கார்ப்பரேட் பயண அளவு 50%க்கும் அதிகமான பங்கைக் கொண்டது. கார்பரேட் நிறுவனங்களின் கார்பன் அளவைக் குறைப்பதில், அதன் சந்தைப் பங்கை விரைவாக வளர்ப்பதற்கான ஒரு உத்தியில், இந்தியாவின் முன்னணி அந்நிய செலாவணி சேவை நிறுவனமான தாமஸ்குக் (இந்தியா) லிமிடெட், முன்னோடி, சுற்றுச்சூழல் ப்ரீபெய்ட் ஃபாரெக்ஸ் கார்ப்பரேட் கார்டான ‘என்டர்ப்ப்ரைஸ் எப் எக்ஸ் ‘ அறிமுகப்படுத்தியுள்ளது. விசா, மாஸ்டெர்கார்ட் உடன் இணைந்து, புதுமையானதயாரிப்பு சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது,

என்டர்ப்ப்ரைஸ் எப் எக்ஸ் இந்தியா முழுவதும்உள்ள வணிகப் பயணிகளை மேம்படுத்தும் வகையில் பிரீமியம் பலன்களை வழங்குகிறது.இந்தமுன்முயற்சி, இந்தியா கா ஃபாரெக்ஸ் நிபுணராக தாமஸ் குக்கின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.புதுமை மற்றும் உயர்ந்த வாடிக்கையாளர் அனுபவத்தில் நிறுவனத்தின் நீடித்த கவனத்தை எடுத்துக் காட்டுகிறது. தாமஸ்குக் எட்ஜ் ரிவார்டு புள்ளிகள் (பிஓஎஸ் பரிவர்த்தனைகளில்) விடுமுறைகள், விமானங்கள் மற்றும் ஹோட்டல்களுககு மாற்றி கொள்ளலாம் இந்தியாவில்உள்ள சர்வதேச விமான நிலையங்களில் இலவச லவுஞ்ச் அணுகல் செல்லுபடியாகும். இலவசசர்வதேச சிம் கார்டு, இலவசஏடிஎம் திரும்பப் பெறுதல், இலவசஇளைஞர் அட்டை: 125+ நாடுகளில் 60,000+ பிராண்டுகளில் 1,50,000+ தள்ளுபடிகள் மற்றும் சலுகைகள்,ஆல்பாயிண்ட்ஏடிஎம்களில் கூடுதல் கட்டணம் இல்லாமல் பணம் எடுப்பது, விரிவானகாப்பீட்டுத் தொகை ரூ. 7,50,000.00, இலவசஅட்டை மாற்று, அவசர பண உதவி உதவியாக இருக்கும்.

# காமன்கோட்டை நிழல்கள் அறக்கட்டளை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம்



**பரமக்குடி, ஏப். 27-**

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட காமன் கோட்டை கிராமத்தில் நிழல்கள் அறக்கட்டளை சார்பில் இராமநாதபுரம் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் போகலூர் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இணைந்து காமன் கோட்டை கிராமத்தில் உள்ள சமுதாய கூடத்தில் மாபெரும் இலவச கண்பரிசோதனை முகாம் நடைபெற்றது.

மேலும் இம்முகாமிற்கு காமன்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள சுற்று வட்டார கிராம பொதுமக்கள் 200 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண் பரிசோதனை மேற்கொண்டனர்.

இம்முகாமில் கண்ணில் நீர் வடிதல், கண்ணில் நீர் அழுத்தம், சர்க்கரை வியாதியால் ஏற்படும் கண் பாதிப்பு, நீர்ப்பை அடைப்பு, கண்ணில் புரை உண்டாகுதல் மற்றும் கண் சம்மந்தமான அனைத்து வியாதிகளுக்கும் இலவச பரிசோதனை செய்யப்பட்டது.

இக்கண் பரிசோதனை முகாமில் கண் புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செயப்பட்டவர்கள், இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். இம்முகாமை காமன் கோட்டை கிராம ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் பாண்டியன் துவங்கி வைத்தார்.மேலும் இம்முகாமிற்கு போகலூர் வட்டார கண் மருத்துவ உதவியாளர் டேனியல் ஜோசப் மற்றும் நிழல்கள் அறக்கட்டளை நிறுவனர் டாக்டர். இராஜ்குமார் பாரதி மற்றும் நிர்வாகிகள் தமிழ்செல்வம்,பிரசாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.



ஒட்டன்சத்திரத்தில் நகர திமுக சார்பில் அமைச்சர் அர சக்கரபாணி ஆலோசனையின் பேரில் பொதுமக்களை வாட்டி வதைக்கும் வெயிலின் தாக்கத்தை தணிக்கும் பொருட்டு நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது.

